Scanned by CamScanner

# பத்தும் செய்தால் பார்புகழ் பெறுவாய்!



ஒரே கடவுளை தினம் தொழுவாய்
இம்மை மறுமை இரண்டறிவாய்
மூன்றும் தவிர்ப்பாய் குரங்கினைப்போல்
நான்குபேர் சொல்லைக் கேட்டிடுவாய்
ஐந்தினை அழகினைப் போற்றிடுவாய்
அறுசுவை உணவை பகிர்ந்துண்பாய்
ஏழாம் நாளில் ஓய்வெடுப்பாய்
எட்டுத்திக்கிலும் சென்றிடுவாய்
ஒன்பது கலைகளில் சிறந்திடுவாய்
பத்துக் கட்டளைகள் கடைப்பிடிப்பாய்!

—பேராயர் மா. அசரியா,
சென்னைப் பேராயம்.

Scanned by CamScanner

# வெள்ளை மாளிகை!

உலக நாடுகளில் எல்லாம் இப்போது அமெரிக்காவின் வெள்ளை மாளிகை பற்றித்தான் பேச்சு அடிபடுகிறது. அந்த அளவுக்கு வெள்ளை மாளிகையின் தரம் குறைந்துவிட்டதா? இல்லவே இல்லை.

வெள்ளை மாளிகைக்கு வரும் ஜனாதிபதிகளின் நடவடிக்கைகள் தான் முகத்தை சுழிக்க வைக்கின்றன.

அக்டோபர் மாதம் 13–ந்தேதி நாட்டப்பட்டது. அந்தக் கட்டிடத்தின் அமைப்பை ஜேம்ஸ் ஹோபன் என்பவர் வடிவமைத்தார். ஜனாதிபதி மாளிகையை எப்படி நிர்மானிக்கலாம், அதற்கான வடிவமைப்பை அனுப்பலாம்" என்ற ரீதியில் போட்டி வைக்கப்பட்டது. அப்படி போட்டி மூலம் தெரிவு செய்யப்பட்டதுதான், ஜேம்ஸ் ஹோபன் வடிவமைத்த படம்.

ஆனால் வெள்ளை மாளிகை எப்போதும் பளீரென்று கம்பீரமாகத்தான் காட்சி அளிக்கிறது.

இந்த "வெள்ளை மாளிகை" பழமையான கட்டிடக் கலையை கொண்டது. இக்கட்டிடத்தின் அடிக்கல் 1792–ம் ஆண்டு

அதன்படியே அமெரிக்க ஜனாதிபதி மாளிகை கட்டப்பட்டது.

## வெள்ளை வர்ணம்

இந்த "மாளிகை" பழுப்பு நிறக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டது. 1812–ம் ஆண்டு தொடங்கிய உலக யுத்தத்தின்போது பிரிட்டிஷ்

Scanned by CamScanner

படையினரால் 1814–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24–ந்தேதி இந்த மாளிகை சேதப்படுத்தபபட்டது. ஆனால் மீண்டும் அதை செப்பனிட ஜேம்ஸ் ஹோபன் என்பவர் உதவினார். ஆங்கிலேயப் படையினரால் சேதப்படுத்தப்பட்ட நிலையில் சுவர்கள் எல்லாம், ஒரே கரியும் தூசியுமாய் படிந்து, அழுக்கேறிய நிலையில் இருந்ததால் பழுப்பு நிறக் கற்களிலான சுவர்கள் மீது வெள்ளை வர்ணம் பூசப்பட்டது. இதனாலேயே, பின்னர் இம்மாளிகை “வெள்ளை மாளிகை” என அழைக்கப்பட்டது. ஆனால் இந்த மாளிகையை “வெள்ளை மாளிகை” யென எல்லோரும் அழைத்தாலும், இப்பெயரை அதிகாரபூர்வமான பெயராக, 1902–ம் ஆண்டில் தியோடர் ரூஸ்வெல்ட் பிரகடனம் செய்தார். அதன்பின்னரே, உலக நாடுகளில் எல்லாம் “வெள்ளை மாளிகை” என்ற பெயர் பிரபலமானது.

வெள்ளை மாளிகையில் உள்ள அறைக்ள்யாவும் வெள்ளை நிறத்தினாலல்ல. குறிப்பிட்ட சில முக்கியமான அறைகள் யாவும் ஒவ்வொரு நிறத்திலுள்ளன. நீள்வட்ட வடிவத்தில், நீல நிறத்திலான அறை, ஜனாதிபதியின் வரவேற்பறையாகவும், ரோஸ் நிறத்திலான அறை விருந்தினர்கள் அறையாகவும் கருதப்பட்டது. வெள்ளை மாளிகையின்மேல் தளத்தில்தான் அமெரிக்க ஜனாதிபதியின் குடும்பம் வசித்து வருகிறது.

## நாடுகளின் தேசிய விளையாட்டு!

| நாடு | | விளையாட்டு |
|---|---|---|
| 1. ஆஸ்திரேலியா | — | டென்னிஸ், கிரிக்கெட் |
| 2. சீனா | — | டேபிள் டென்னிஸ் |
| 3. இங்கிலாந்து | — | கிரிக்கெட், கால்பந்து. |
| 4. இந்தியா | — | ஆக்கி, கபடி. |
| 5. ஜப்பான் | — | ஜூடோ |
| 6. மலேசியா | — | பேட்மிட்டன் |
| 7. ஸ்காட்லாந்து | — | ரக்பி, கால்பந்து. |
| 8. ஸ்பெயின் | — | எருதுச் சண்டை |
| 9. அமெரிக்கா | — | பேஸ்பால் |

Scanned by CamScanner

# குரங்குக்கு விருந்து

குரங்கில் இருந்துதான் மனிதன் தோன்றினான் என்கிறார்கள். ஆனால் அந்த குரங்குக்கு இருக்கும் அறிவுகூட மனிதர்களுக்கு இல்லை என்றும் கூறுகிறார்கள். தாய்லாந்து நாட்டில் ஆண்டுக்கு ஒருநாள் அங்குள்ள எல்லாக் குரங்குகளையும் வரவழைத்து உணவு பரிமாறி விருந்து வைக்கிறார்கள். குரங்குகள் கூட்டத்தில் எந்தக் குரங்குக்காவது அன்றைக்கு உடம்பு சரியில்லாமல்

காய்ச்சலில் படுத்துவிட்டால், மற்ற குரங்குகள் விருந்துக்கு வந்த இடத்தில் இருந்து உணவுப் பொருட்களை எடுத்துச் சென்று அந்த நோய்வாய்ப் பட்ட குரங்குக்கு கொடுக்கின்றன. மனிதரில் யாராவது இப்படி செய்கிறார்களா? மிருகத்துக்கு இருக்கும் ஒற்றுமைகூட மனிதனுக்கு இல்லையே.

# பூமிக்கு பிறந்த நாள் விழா !

நாம் ஒவ்வொரு ஆண்டும் பிறந்த நாள் கொண்டாடுகிறோம் அல்லவா? அதுபோல பூமிக்கும் பிறந்த நாள் கொண்டாடுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 22–ந்தேதி பூமிக்கு பிறந்த நாள் விழா எடுக்கிறார்கள். பூமியின் சுற்றுப்புறச் சூழ்நிலையை பாதிக்காமல் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சிக்காக 1970–ம் ஆண்டு முதல் ஏப்ரல் 22ஐ பூமியின் பிறந்த நாளாக பின்பற்றி வருகிறார்கள்!

---

★ இந்திய ராணுவத்தில் பதின்மூன்று இலட்சத்து அறுபத்து இரண்டாயிரம் பேர் பணிபுரிகின்றார்கள்.

★ ஐரோப்பாவில் உள்ள காஸ்பியன் கடலின் ஆழம் எவ்வளவு தெரியுமா?
28 மீட்டர்!

★ பிளாட்டிபஸ் என்ற உயிரினம் பிறந்து 77 நாளுக்குப் பிறகே கண்திறக்கும்.

★ மனிதன் கண்டுபிடித்த உலோகங்களில் மிகவும் பழமையானது செம்பு.

# தெரியுமா ?

கீழே உள்ள நான்கு புலிகளில் ஒரு புலி மட்டும் வரிக்குதிரையை அடித்து சாப்பிட்டிருக்கிறது. அது எந்தப் புலி என்று உங்களுக்குத் தெரியுமா? கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!




விடை : C

Scanned by CamScanner

# கண்டுபிடியுங்கள்!

கீழே சிலகாய்கறிகள் சிதறிக் கிடக்கின்றன. அவை எவை எவை? கண்டுபிடியுங்கள் பார்ப்போம். முடியவில்லை என்றால் சில குறிப்புகள் தருகிறோம்.

1. பாம்பு போல இருக்கும்.
2. கொடியில் காய்க்கும்.
3. வேம்பைப் போல கசக்கும்.
4. முந்தானை முடிச்சு.
5. திருஷ்டி சுற்றுவார்கள்.




விடை: 50-ம் பக்கம்.

Scanned by CamScanner

# கரடியின் எடை?

**து**ருவக் கரடிக்குட்டி பிறக்கும் பொழுது எலிக்குஞ்சு போலத்தான் சிறியதாக இருக்கும். ஆனால் மூன்று மாதம் கழித்துப் பார்த்தால் 18 கிலோ எடைக்கு வந்துவிடும். அதன்பிறகு பார்த்தீர்களானால், அசுர வளர்ச்சி தான்.

1.6 மீட்டர் உயரமுள்ள துருவக் கரடியின் எடை சுமார் 800 கிலோ எடை இருக்கும் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

# அழியாத கால்தடம்!

**பூ**மியில் எங்காவது ஓர் இடத்தில் நம்முடைய கால்தடம்பதிந்தால் உடனே அழிந்துவிடும். ஆனால் நீல் ஆர்ம்ஸ்டிராங் சந்திரனில் கால்பதித்த தடம் இன்னும் அப்படியேதான் இருக்கின்றன.

காரணம்— சந்திரனில் காற்றோ தண்ணீரோ இல்லை. எனவே ஆர்ம்ஸ்டிராங்கின் கால்தடம் அப்படியே இருக்கிறது.

# அழகுப் பூனை!

**உ**லகில் அங்கங்கே அழகிப் போட்டிகள் நடந்துகொண்டு இருப்பதைப் போல, மலேசியாவில் அழகிய பூனைகளுக்கான போட்டி நடக்கின்றன. படத்தில் இருக்கும் இந்தப் பூனை தொடர்ந்து நான்காவது முறையாக சிறந்த அழகுப் பூனைக் கான பரிசை தட்டிச்சென்றிருக்கிறது. இந்தப் பூனையின் பெயர் பீன்பீன். பட்டாலிஸ் ஜெயா பகுதியில் இந்த அழகுப் பூனைக்கான போட்டி நடந்தது. ஏராளமான பூனைகள் போட்டியில் கலந்துகொண்டன.

---

★ பருத்தியை சூரியனின் மகள் என வர்ணிக்கிறார்கள்.

★ கிறிஸ்டியன் பர்னார்ட் என்பவர்தான் 1967—ல் முதன் முதலாக இருதய மாற்று அறுவை சிகிச்சையை செய்தார்.

Scanned by CamScanner

ராணி காமிக்ஸ் – 344
(மாதம் இருமுறை இதழ்)

அக்டோபர் 16 – 31
1998

முகமூடி வீரர்

**மாயாவி**

தோன்றும்

# சிங்கச் சிறுவன்




Scanned by CamScanner




Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner







Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner




Scanned by CamScanner

Scanned by CamScanner










Scanned by CamScanner

Scanned by CamScanner







Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

அலோ ! காட்டுக்குள் ஒரு சிறுவனையும், சிங்கத்தையும் பார்த்தீர்களா ?
ஆமாம் ! நேற்று மதியம் காட்டுக்குள் பார்த்தோம் !
உங்கள் பையனா ? சிங்கம் அவன் தோழனா ?
உங்கள் பையன்தான் இந்த கொலைகாரனை பிடித்துக் கொடுத்திருக்கிறான் !
உண்மை லேயே அ ன இல் தான் !

அன்று இரவு டாமியும் அலெக்சும் ஓர் இடத்தில் தங்கி இருந்தார்கள். அப்போது—
கருஞ்சிறுத்தை அங்கே வந்தது.
டாமி! அதோ கருஞ்சிறுத்தை வருகிறது! அதனிடம் கொஞ்சம் விளையாடிப் பார்ப்போமா?
?
தூரத்தில் முர்சு சத்தமும், தீப்பந்தத்தையும் கண்டதும், கருஞ்சிறுத்தை பாய்ந்தோடியது.
அங்கே சூனியக்காரன்—
அவன் இருக்கும் இடத்தை சுற்றி நெருப்பு வையுங்கள்!

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner






Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

# இந்தியாவில் எத்தனை மாநிலம்?

முன்பெல்லாம் பள்ளி மாணவ மாணவிகளிடம் இந்தியாவில் எத்தனை மாநிலங்கள்? அல்லது தமிழ்நாட்டில் எத்தனை மாவட்டங்கள் என்று கேட்டால் சட்டென்று சொல்லிவிடுவார்கள். ஆனால் இப்போது மாணவ மாணவிகளிடம் கேட்டுப் பாருங்கள். பேயைப் பார்த்தது போல திருதிருவென்று விழிக்கிறார்கள்.

காரணம், இப்பொழுதுதான் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மாநிலங்கள், மாவட்டங்கள் என்று பிரித்துக்கொண்டே போகிறார்களே! இப்போது இந்தியாவில் இருக்கிற மாநிலங்கள் போதாதென்று புதிதாக மூன்று மாநிலங்களை உருவாக்குகிறார்கள். உத்திரப்பிரதேசத்தில் உள்ள மலை மாவட்டங்களை ஒன்றாக இணைத்து உத்தராஞ்சல் என்றும் மத்தியபிரதேசத்தில் பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளை இணைத்து சதிஷ்கார்க் என்றும், பீகாரில் உள்ள ஜார்க்கண்ட் பகுதியை தனி மாநிலமாகவும் பிரித்து மூன்று புதிய மாநிலங்களை உருவாக்க இருக்கிறார்கள்.

இப்படியே போனால் ஆட்சிக்கு வருகிறவர்கள் எல்லாம் தங்கள் பங்குக்கு மூன்று மாநிலங்களை உருவாக்கிவிட்டுச் செல்வார்கள்.

Scanned by CamScanner

# புலிக் கொசு!

புலிக் கொசு எனப்படும் ஒரு வகை கொசுதான் டெங்கு காய்ச்சலைப் பரப்புகிறது. புலிக் கொசு கருப்பு நிறத்தில் இருக்கும். உடம்பில் வெள்ளைக் கோடுகள் இருக்கும்.

இந்த புலிக் கொசுக்கள் தண்ணீர்த் தொட்டிகள், குப்பைக் கூடைகள், பூச்சாடிகள், பாட்டில்கள், தேங்காய்மட்டைகள் ஆகியவற்றில் இனப்பெருக்கம் செய்யக்கூடியது.

மற்ற கொசுக்களைப் போல புலிக் கொசு இரவில் மனிதர்களைக் கடிப்பதில்லை. பகலில்தான் இது மனிதர்களை கடித்து இரத்தத்தை உறிஞ்சுகிறது. இது மிகவும் தாழ்வாகப் பறக்கக்கூடியது.



டெங்கு காய்ச்சலை மட்டுமின்றி மஞ்சள் ஜுரம், மலேரியா உட்பட பல நோய்களையும் புலிக் கொசு பரப்புகின்றன.

இந்த புலிக் கொசுக்களை நம் வீட்டுக்குள் அண்டவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமானால், திறந்த நிலையில் உள்ள தண்ணீரை அப்புறப்படுத்த வேண்டும். கழிவுநீர் தேங்கும் பகுதிகளில் டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றை சிறிது தெளித்து வைக்க வேண்டும். பூச்சிக்கொல்லிகளை உபயோகிப்பதினாலும், கொசுவர்த்திச்சுருளை பயன்படுத்தியும் புலிக் கொசு வராமல் தடை செய்யலாம்.

★ உலகில் தேயிலை உற்பத்தியில் நம்பர் ஒன் ஆக இருப்பது இந்தியாதான். ஆனால் அடுத்த நூற்றாண்டில் இந்தியாவை இரண்டாம் இடத்துக்கு தள்ளி விட்டு சீனா முதல் இடத்துக்கு வந்துவிடும் போலிருக்கிறது.

★ இந்தியாவின் முதல் அருங்காட்சியகம் 1796-ல் கல்கத்தாவில் கட்டப்பட்டது.

★ பிரான்சு நாட்டைச் சேர்ந்த அல்பே சார்லஸ் மைக்கேல் என்பவர்தான் முதன்முதலாக சைகை மொழியை கண்டுபிடித்தார்.

**7-ம் பக்க புதிருக்கு விடை:-**

1. புடலங்காய்
2. அவரைக்காய்
3. பாகர்க்காய்
4. முருங்கைக்காய்
5. பூசனிக்காய்

Scanned by CamScanner

# முதலைத் தீவு

சிவகுமார்

10

**முன்கதை சுருக்கம்:**

**சொர்க்கபுரி நாட்டை சேதுபதி என்ற மன்னர் ஆண்டு வந்தார். அவருக்கு பார்த்திபன் என்றொரு மகன் இருந்தான். மன்னர், முதல் மனைவி இறந்ததும் சுந்தரவல்லி என்ற பணிப் பெண்ணை இரண்டாவதாக மணமுடித்தார். சுந்தரவல்லியும் அவளது தம்பி பூபதியும் நாட்டை கைப்பற்ற மன்னரை வேட்டைக்கு அழைத்துச் சென்று கொல்ல திட்டமிட்டார்கள். காட்டுக்குள் சென்ற மன்னர், முனிவரின் தவத்தை கலைத்ததால் முனிவர் மன்னரை கல்லாக்கினார். மன்னர் இறந்துபோன செய்தியைக் கேட்ட பார்த்திபன், தந்தையைத் தேடி காட்டுக்குச் சென்றான். காட்டில் கற்சிலையாகி நிற்கும் தந்தையைக் கண்டதும் பார்த்திபன் அதிர்ச்சியில் உறைந்துபோனான்.**

முனிவரின் சாபத்தில் இருந்து விடுபட வழி இருக்கிறது என்று மன்னர் சொன்னதும், பார்த்திபன் உற்சாகமடைந்தான்.

"சொல்லுங்கள் அப்பா. என்ன வழி இருக்கிறது" என்று ஆவலோடு கேட்டான்.

"பார்த்திபா... அது ஆபத்தான வேலை..."

"அப்பா... நான் வீரன் என்று நீங்கள்தானே சொன்னீர்கள். வீரன் ஆபத்தைக் கண்டு அஞ்சலாமா... சொல்லுங்கள் அப்பா..."

"இல்லை மகனே... அது வந்து..." மன்னர் தயங்கினார்.

"தயங்காமல் சொல்லுங்கள் அப்பா. தந்தை ஆபத்தில் சிக்கியிருக்

Scanned by CamScanner

கும்பொழுது, மகன் அந்த ஆபத்தில் இருந்து தந்தையை விடுவிப்பதுதான் நியதி.”

“அதற்கில்லை பார்த்திபன்.”

“அப்பா! உங்களுக்காக நான் என் உயிரைத் தரக்கூட தயாராக இருக்கிறேன். தயங்காமல் சொல்லுங்கள் அப்பா” என்று பார்த்திபன் மீண்டும் மன்னனை வற்புறுத்தினான்.

சாபத்தில் இருந்து விடுபடுவதற்கான வழியை மன்னர் சொன்னார். “மகனே! இங்கிருந்து தெற்கே போனால் முதலைத்தீவு என்று ஒரு தீவு இருக்கிறதாம். அந்த தீவில் இருக்கும் பொற்றாமரை குளத்தில் காந்தமலர் பூத்திருக்குமாம். அந்த காந்தமலரை எடுத்து வந்து என்னைத் தொட்டால் நான் சுய உருவைப் பெற்றுவிடுவேன் என்று முனிவர் சொன்னார். அதுமட்டுமல்ல... காந்தமலரை எடுத்து வருவது என்பது அவ்வளவு எளிதல்ல என்று முனிவர் சொன்னார். அது ஒரு வீரனால் மட்டும் முடியும் என்றார்.”

“அப்பா... என்னைப் பார்த்தால் உங்களுக்கு வீரனாகத் தெரியவில்லையா? இல்லை என் வீரத்தில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?” என்றான் பார்த்திபன்.

“நான் அப்படிச் சொல்லவில்லை மகனே...”

“இல்லை... நான் இப்பொழுதே முதலைத் தீவுக்குச் சென்று அந்த காந்தமலரை எடுத்து வந்து உங்களுக்கு சுயரூபத்தை பெற்றுத் தருவேன். என்னை வாழ்த்தி வழி அனுப்பி வையுங்கள் அப்பா. வெற்றியோடு திரும்பி வருகிறேன்” என்ற பார்த்திபன் தந்தையின் காலைத் தொட்டு வணங்கினான்.

“மகனே... வெற்றியுடன் திரும்பி வா” என்று மன்னர் பார்த்திபனை வாயார வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார்.

பார்த்திபன் சட்டென்று குதிரையில் ஏறி குதிரையை தெற்கு பக்கமாக செலுத்தினான். குதிரையும் அவன் எண்ணத்திற்கு ஈடுகொடுப்பது போல நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்தோடத் தொடங்கியது.

அதேநேரம்– சொர்க்கபுரி நாட்டில் சுந்தரவல்லியும், அவளுடைய தம்பி பூபதியும் முக்கிய ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தார்கள்.

“தம்பி! மன்னர் கற்சிலையாகி ஒரு வாரத்துக்குமேல் ஆகிவிட்டது. அவரைத் தேடிச் சென்ற பார்த்திபனை பற்றியும் இதுவரை எந்தத் தகவலும் இல்லையே... என்ன செய்வது” என்று சுந்தரவல்லி

Scanned by CamScanner

கேட்டாள்.

"அக்கா... இந்த மாதிரி சந்தர்ப்பத்துக்காகத்தான் நாம் காத்திருந்தோம். இனிதான் விவேகமாக காய்களை நகர்த்த வேண்டும். நாளை உடனடியாக அமைச்சர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும். கூட்டத்தில் மன்னர் இல்லாததினால் ஆட்சி பொறுப்பு அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டது. மன்னருக்குப் பிறகு நாட்டை ஆட்சி செய்யவேண்டிய இளவரசர் பார்த்திபனும் காட்டுக்குள் போனவர் இதுவரை நாடு திரும்பவில்லை. எனவே ஆட்சியில் முக்கிய முடிவுகளை எடுக்கவேண்டுமானால் ஆட்சியை யாரிடமாவது ஒப்படைக்க வேண்டும். என்ன செய்யலாம் என்று அமைச்சர்களிடம் கேட்போம்."

"அப்படிக் கேட்டால், அவர்கள் ஆட்சி பொறுப்பை நம்மிடம் ஒப்படைத்துவிடுவார்களா?" என்று சுந்தரவல்லி ஆவலோடு கேட்டாள்.

"அக்கா... மன்னருக்கு பிறகு இளவரசர். இளவரசரும் இல்லை என்றாகிவிட்டதால் அடுத்து ஆட்சி அமைக்கும் பொறுப்பு உனக்குத்தான் வரும்... அவர்களாகவே ஆட்சி பொறுப்பை ராணியார் ஏற்றுக்கொள்ளட்டும் என்று சொல்லிவிடுவார்கள். பிறகென்ன? ஒரு நல்ல நாளில் நீ ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியது தான்" என்றான் பூபதி.

"பூபதி கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அமைச்சர்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமே..."

"அக்கா... நீ ஏன் கவலைப்படுகிறாய்? அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றான்.

மறுநாள் காலை. அமைச்சரவை கூட்டம் கூடியது. எல்லா அமைச்சர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். சுந்தரவல்லியும், பூபதியும் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள்.

பூபதிதான் முதலில் பேச்சைத் தொடங்கினான். "கூட்டத்திலிருக்கும் அமைச்சர்களுக்கு வணக்கம். மன்னர் காலமாகிவிட்டபடியால், அடுத்து இளவரசர் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும். ஆனால் இளவரசர் காட்டுக்குப் போனவர், ஒரு வார காலம் ஆகியும் இன்னும் நாடு திரும்பவில்லை. ஆட்சி பொறுப்பை ஏற்க இளவரசர் இல்லாததினால் எல்லாமே ஸ்தம்பித்துவிட்டது. ஆட்சி வழக்கம் போல நடக்க வேண்டும். எனவே, ராணியார் சுந்தரவல்லியிடம் ஆட்சி பொறுப்பை ஒப்படைப்பது நல்லது என்று என் மூளைக்கு தென்படுகிறது. ஆட்சிப்

Scanned by CamScanner

Scanned by CamScanner

பொறுப்பை ராணியாரிடம் ஒப்படைப்பது பற்றி உங்கள் கருத்து என்ன? தைரியமாக சொல்லுங்கள்" என்று பூபதி சாமர்த்தியமாக பேச்சைத் தொடங்கினான்.

உடனே தலைமை அமைச்சர் எழுந்து "அது எப்படி? இளவரசர் உயிரோடு இருக்கும்பொழுது ராணியாரிடம் ஆட்சி பொறுப்பை எப்படி ஒப்படைக்க முடியும்" என்று கேட்டார்.

அவர் அப்படிச் சொன்னதும், கூட இருந்த அமைச்சர்களில் சிலர் எழுந்து "ஆமாம்... அது எப்படி முடியும்" என்று எதிர்க் கேள்வி கேட்டார்கள்.

உடனே பூபதி "நீங்கள் கேட்பது நியாயம்தான். ஆனால் இளவரசர் காட்டுக்குள் சென்றவர் இன்னும் நாடு திரும்பவில்லையே... அவர் எப்பொழுது திரும்பி வருவார் என்று தெரியவில்லை. அதுவரை ஆட்சி கேட்பாரற்று கிடக்க முடியுமா?"

"அதற்குத்தான் அமைச்சர்களாகிய நாங்கள் இருக்கிறோமே... நாங்கள் அதை பார்த்துக்கொள்ள மாட்டோமா" என்று அமைச்சர்கள் ஒட்டுமொத்தமாக குரல் எழுப்பினார்கள்.

"இப்போது இருக்கிற சூழ்நிலையில் நம் நாடு சிதறிவிடக் கூடாது. தலைமை இல்லை என்றால் அண்டை நாட்டவர்களுக்கு கொண்டாட்டம் ஆகிவிடும். பிறகு நம் நாட்டு மீது படையெடுத்து நாட்டை கையகப்படுத்திக்கொண்டால் என்ன செய்வது? பிறகு இளவரசர் திரும்பி வந்து, எதிரிகள் நாட்டை கைப்பற்றுமளவுக்கு நீங்கள் என்ன செய்துகொண்டிருந்தீர்கள் என்று என்னிடம் கேட்டால் நான் என்ன சொல்லி இளவரசரை சமாதானப்படுத்த முடியும்... சொல்லுங்கள்" என்று சுந்தரவல்லியும் தன் பங்குக்கு பேசினாள்.

"ராணியார் சொல்வதும் சரியாகத்தான்படுகிறது" என்று சில அமைச்சர்கள் தன் முடிவை மாற்றிக்கொண்டார்கள்.

"அதற்குத்தான் நானும் சொல்கிறேன். அப்படி ஒரு சிக்கல் வந்து சொர்க்கபுரி எதிரியிடம் போய்விடக் கூடாது. நாட்டுக்கு தலைமை ஒன்று இருந்தால் எதிரிகள் அஞ்சுவார்கள் அல்லவா? அதனால்தான் ராணியாரிடம் ஆட்சி பொறுப்பை ஒப்படைத்துவிடுவோம். இளவரசர் திரும்பி வரும்வரை ராணியாரே நாட்டை ஆட்சி செய்யட்டும். இளவரசர் வந்ததும் ஆட்சிப் பொறுப்பை ராணியார் இளவரசரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். என்ன நான் சொல்வது சரிதானா?" என்று பூபதி பொட்டில் அடித்தது போலக் கேட்டான்.

Scanned by CamScanner

பூபதியின் பேச்சில் நியாயம் இருப்பதாகத்தான் தெரிகிறது என்ற மற்ற அமைச்சர்களும் ஒத்துக்கொண்டார்கள். ஆனால் தலைமை அமைச்சருக்கு மட்டும் ஆட்சி பொறுப்பை ராணி சுந்தரவல்லியிடம் ஒப்படைப்பது பிடிக்கவில்லை. என்ன செய்வது? மற்ற அமைச்சர்கள் ஒத்துக்கொள்கிறபோது தான் மட்டும் தனியே இருக்க முடியாது என்று எண்ணிய அமைச்சர் "சரி, அப்படியே செய்துவிடுவோம்" என்றார்.

இளவரசர் திரும்பி வரும்வரை ஆட்சிப் பொறுப்பை ராணியாரிடம் ஒபபடைப்பது என்று அமைச்சரவை கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. அத்துடந் ஒரு நல்ல நாளில் ராணியாரிடம் ஆட்சி பொறுப்பை ஒப்படைத்துவிடுவோம் என்று அமைச்சர்கள் முடிவு எடுத்தார்கள்.

உடனே அரண்மனை சோதிடரை வரவழைத்து நல்ல நாள் பார்த்தார்கள். சோதிடரும் பஞ்சாங்கத்தை அலசி பார்த்துவிட்டு, "நாளை மிகவும் நல்ல நாள். அன்றே ராணியாரை நாட்டுக்கு ராணியாக்கிவிடலாம்" என்றார்.

அமைச்சர்களும் "அப்படியே செய்துவிடலாம்" என்று சொல்லி அத்தோடு கூட்டத்தை முடித்தார்கள்.

தனி அறைக்கு வந்த சுந்தரவல்லியும், பூபதியும் மகிழ்ச்சியில் திளைத்திருந்தார்கள். "அக்கா... என் விவேகத்தை பார்த்தாயா? நான் சொன்னது போல உன்னை நாட்டுக்கு ராணியாக்கிவிட்டேன். நீ ராணி ஆன மறுநாளே என்னை நாட்டுக்கு தளபதி ஆக்கிவிட வேண்டும். மறந்துவிடப் போகிறாய்" என்றான் பூபதி.

"நான் ராணி என்றால், நீதான் தளபதி. அதில் எந்தவித மாற்றமும இல்லை..." சுந்தரவல்லி சொன்னதும், இருவரும் கலகலவென்று சிரித்தார்கள்.

அவர்களின் இரகசிய உரையாடலை வெளியில் இருந்து கேட்டுக்கொண்டிருந்த தலைமை அமைச்சரின் முகம் வெளிறிப் போனது.

**(தொடரும்)**

*ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. அச்சிட்டவர்: ர. பாஸ்கரன், சிண்டிகேட் ஆர்ட் பிரஸ், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.*

Scanned by CamScanner

# துப்பாக்கி ஏந்தும் மாணவர்கள் !

அமெரிக்க நாட்டு மாணவர்கள் தங்கள் பெற்றோரின் கைத்துப்பாக்கிகளை எடுத்து சென்று... யாரையாவது சுட்டுக் கொல்வது என்பது சர்வசாதாரணமாகி வருகிறது.

கடந்த மாதத்தில் ஒருநாள்... ஆண்ட்ரு என்ற மாணவன் தன் பள்ளிக்கு கைத்துப்பாக்கியுடன் வந்தான். பதினான்கு வயதே ஆகும் அவனுக்கு எப்போதுமே அறிவியல் பாடம் நடத்தும் ஆசிரியர் ஜான் மீது வெறுப்பு. ஆசிரியர் ஜான் அடிக்கடி தன்னை திட்டுகிறார் என்று ஆண்ட்ரு வெறுப்பில் இருந்தான்.

அன்று... ஆசிரியர் ஜானுக்கு கெட்ட நேரம் என்றுதான் சொல்ல வேண்டும். ஏதோ ஒரு காரணத்துக்காக ஆண்ட்ருவை செம எக்கு எக்கினார்.

தாங்கிக்கொள்ள முடியாத ஆண்ட்ரு துப்பாக்கியை எடுத்தான். ஆசிரியரின் நெற்றியை குறிபார்த்தான்.

டுமீல்... மறுவினாடி ஆசிரியர் ஜான் செத்து கீழே விழ... ஆண்ட்ரு ஓடிவிட்டான்.

பிறகு எப்படியோ போலீஸ் கைகளில் சிக்கினான். வாக்குமூலம் கொடுத்தபோது, "9 ஆசிரியர்கள் என்னை அடிக்கடி திட்டிக் கொண்டே இருந்தனர். அவர்கள் ஒன்பது பேரையும் தீர்த்துக்கட்ட நினைத்தேன். ஒருவர்தான் கிடைத்தார்" என்றான்.

# மீண்டும் பெரிய யானை

யானை வகைகளில் 'மம்மூத்' எனப்படும் மிகப்பெரிய, உயரமான யானைகள் முப்பது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தன. சைபீரியக் காடுகளில் நிறைய காணப்பட்ட இந்த யானை இனத்தில் இப்போது ஒன்றுகூட உயிருடன் இல்லை.

இங்கிலாந்து, ரஷியா, ஜப்பான் நாட்டு விஞ்ஞானிகள் இந்த பெரிய யானையை மீண்டும் உருவாக்கும் முயற்சிகளில் ஒன்றிணைந்து ஈடுபட்டு உள்ளனர். இதற்காக அவர்கள் சைபீரியக் காடுகளில் அந்த பெரிய யானையின் மூலக்கூறுகள் ஏதேனும் கிடைக்குமா என்று தேடுதல் வேட்டை நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

Scanned by CamScanner

# குழந்தையை கடத்திய சிறுமிகள்!

குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பார்கள். ஆனால் இன்று அந்தக் குழந்தைகளை சாலைகளில் பிச்சை எடுக்கவும், பிக்பாக்கெட் அடிக்கவும், வீடுகளில் பொருட்களை திருடவும், குழந்தைகளை கடத்தவும் வைக்கிறார் கள். சாலைகளில் அனாதைகளாக—திக்குத்தெரியாமல் அலையும் குழந்தைகளை சில சமூகவிரோதிகள் பிடித்துப்போய் இந்த மாதிரியான காரியங்களில் விட்டுவிடுகிறார்கள். அந்த பிஞ்சுகள் திருடி வரும் பொருட்களை வைத்து இந்த சமூகவிரோதிகள் வாழ்க்கையை ஓட்டிவருகிறார்கள். இது இங்கு மட்டுமல்ல, உலகில் பல நாடுகளில் இந்தக் கொடுமைகள் நடக்கின்றன.

சமீபத்தில்கூட குஜராத் மாநிலத் தில் இரண்டு சிறுமிகள் சேர்ந்து ஒரு சின்ன குழந்தையை கடத்த முயன்றபொழுது கையும்களவுமாக பிடிபட்டிருக்கிறார்கள். பிடிபட்ட சிறுமி கவுசாவுக்கு 14 வயதாகிறது. இன்னொரு சிறுமியான காம்லி சுக்ராமுக்கு 12 வயதுதான் ஆகிறது.

இவர்கள் இருவரும் மராட்டிய மாநிலம் கோரிகான் பகுதியில் ஆட்டோவில் வந்து இறங்கியிருக் கிறார்கள். அவர்களை பிரசாத் என்ற 25 வயது இளைஞன் அழைத்து வந்திருக்கிறான்.

அந்த இளைஞன் ஆட்டோவில் இருந்துகொள்ள இரண்டு சிறுமிகள் மட்டும் ஆட்டோவில் இருந்து இறங்கி அந்தப் பகுதியில் நடந்து சென்றுகொண்டிருந்திருக்கிறார்கள்.

அப்போது ஒரு வீட்டின் வெளியே ஒரு வயதுக் குழந்தை ஒன்று விளையாடிக்கொண்டிருந்திருக்கிறது. அந்தக் குழந்தையைப் பார்த்ததும், கவுசா, காம்லி இருவரும் குழந்தையை தூக்கிக்கொண்டு ஆட்டோவை

Scanned by CamScanner

நோக்கி ஓட்டம்பிடித்திருக்கிறார்கள்.

அதைப் பார்த்த அந்த குழந்தையின் தாய் கூச்சலிட்டிருக்கிறார். உடனே கூட்டம் கூடிவிடவே அனைவரும் சேர்ந்து அந்த சிறுமிகளை மடக்கி பிடித்துவிட்டார்கள். இருவரையும் போலீசில் ஒப்படைத்துவிட்டார்கள். ஆட்டோவில் இருந்த அந்த இளைஞன் சிறுமிகள் பிடிபட்டதும் நொடியில் காணாமல் போய்விட்டான்.

அந்த இளைஞன் மட்டும் குழந்தையை கடத்தியிருந்தால் பெற்றோர்களிடம் இருந்து ஒரு கணிசமான தொகையை வாங்கி இருப்பான். இப்படியெல்லாம் தவறான செயல்களுக்கு சிறுவர்–சிறுமிகளை பயன்படுத்தி அவர்களின் எதிர்காலத்தில் மண் அள்ளிப் போட்டுவிடுகிறார்கள். இப்படிப் பட்ட சமூகவிரோதிகளை தேடிப் பிடித்து கடுந்த தண்டனை வழங்க வேண்டும். *

## 68 வருட விக்கல்

விக்கல் ஒரு மோசமான நோய். சிலருக்கு திடீரென ஏற்படும் விக்கல் மணிக்கணக்கில்கூட நீடிக்கும். ஆனால் ஒரு விவசாயிக்கு 68 வருடம் தொடர்ந்து விக்கல் இருந்தது என்றால் நம்பமுடிகிறதா?

அந்த பரிதாபத்திற்குரிய விவசாயியின் பெயர் சார்லஸ். அமெரிக்க நாட்டைச் சேர்ந்த அவர், 1922–ம் ஆண்டு பன்றி ஒன்றை தூக்கி எடை பார்த்தபோது திடுமென விக்கல் ஏற்பட்டது.

68 வருஷமா... அந்த விக்கல் நிற்கவில்லை. மனுஷன் நொந்து விட்டார். 1990–ம் ஆண்டு அந்த விக்கல் தானாக நின்றது.

## உயரமானவர்கள்

உலகிலேயே மிகவும் குட்டையானவர்கள் யார் என்றால் ஜப்பான் நாட்டுக்காரர்கள் என்று சொல்லி விடுவீர்கள். உலகிலேயே உயரமானவர்கள் எந்த நாட்டில் இருக்கிறார்கள் தெரியுமா? டச்சு நாட்டில்.

டச்சுக்காரர்களின் சராசரி உயரம் 6 அடி. இந்த உயரத்துக்கு குறைந்து அங்கு நீங்கள் ஆட்களைப் பார்ப்பது அரிதாக இருக்கும். அடுத்த 50 ஆண்டுகளில் டச்சுக்காரர்களின் சராசரி உயரம் 6.6 அடியாக இருக்கும் என்று கணித்துள்ளனர்.

Scanned by CamScanner

# 'ரோபாட்' நாய்

ஜப்பான் நாட்டில் அதிநவீன 'ரோபாட்' நாய்க்குட்டி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அசல் நாய் போல இருக்கும் இந்த ரோபாட், நாய்க்குட்டி போலவே நடந்து கொள்கிறது.

முன்கால்களை நீட்டி அதன்மேல் தலையை வைத்து நாய்கள் படுப்பது போல படுத்துக்கொள்ளும் அந்த நாய்க்குட்டி... யாராவது கையை நீட்டினால் உடனே வாலாட்டுகிறது. தன் முன் காலை எடுத்து கை மீது வைக்கிறது. அன்புடன் நக்குகிறது.

அதுமட்டுமல்ல... அதன் தலையில் லேசாக தட்டினால் போதும்... ஒரிஜினல் நாய் போலவே "லொள்" என்று கத்துகிறது. ஆனால் ஒருபோதும் கடிக்காது.

பணக்கார குழந்தைகளுக்கு இந்த ரோபாட் நாய் நல்ல பொழுது போக்கு கருவியாகும்.

# தற்கொலை விவரம்

ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுக்க 50 லட்சம் பேர் தற்கொலை செய்துகொள்கிறார்கள். இந்தியாவைப் பொறுத்தவரை ஒவ்வொரு 6 நிமிடத்துக்கும் ஒரு நபர் ஏதாவது ஒரு வகையில் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

தற்கொலை விஷயத்தில் கேரளா மாநில மக்கள் முதல் இடத்தில் இருப்பதாக கருத்து கணிப்புகள் கூறுகின்றன. மராட்டிய மாநிலம் 2–வது இடத்தில் உள்ளது.

வளர்ந்துவிட்ட நாடுகளில் தற்கொலை செய்துகொள்பவர்களின் எண்ணிக்கை குறைவுதான். அமெரிக்காவில் ஒவ்வொரு 20 நிமிடத்துக்கும் ஒரு நபர் தற்கொலை செய்துகொள்கிறார்.

★ பிரம்மபுத்திரா ஆற்றைவிட $2\frac{1}{2}$ மடங்கு பெரிய ஆறு அமேசான் ஆறு.

★ 'உர்' என்பது என்ன தெரியுமா? ஈராக் நாட்டின் ஆரம்பக்காலப் பெயர்தான் 'உர்.'

Scanned by CamScanner

# சாமர்த்தியம்

—பேராசிரியர் எ. சோதி

ஓர் ஊரில் உழவன் ஒருவன் இருந்தான். அவனும் அவன் குடும்பமும் வறுமையில் வாடியது. அந்த ஊரிலிருந்த பெருஞ் செல்வரிடம் சென்றால் பொருள் உதவி கிடைக்குமென்று நினைத்தான் அவன்.

வெறுங்கையுடன் அவரிடம் எப்படிச் செல்வது என்று குழம்பினான் அவன். தன் வீட்டிலிருந்த ஒரே ஒரு கோழியைப் பிடித்தான். அப்படியே முழுக்கோழியாக வறுத்தெடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

செல்வரைச் சந்தித்த அவன் தன் அன்பளிப்பாக வறுத்த கோழியைத் தந்தான். மகிழ்ச்சியுடன் அதைப் பெற்றுக்கொண்டார் அவர்.

"உழவனே! உன் அன்பளிப்பிற்கு நன்றி. என் குடும்பத்தைப் பார். எனக்கு ஒரு மனைவி, இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள் இருக்கிறார்கள். எல்லோருக்கும் இந்தக் கோழியை நீயே பங்கு பிரித்துக் கொடு" என்று அவனிடமே கோழியைத் தந்தார் அவர்.

"நான் பிரித்துத் தருகிறேன்" என்ற அவன் அந்தக் கோழியின் தலையை வெட்டினான். "செல்வரே! இந்தக் குடும்பத்திற்குத் தலைவர் நீர். அதனால் இந்தக் கோழியின் தலை உமக்கு உரியது" என்று அவரிடம் தந்தான்.

பிறகு கோழியின் இடுப்புக்குக் கீழ் உள்ள பகுதியை வெட்டினான். அதைச் செல்வரின் மனைவியிடம் தந்தான். "அம்மா! நீங்கள் எப்பொழுதும் அமர்ந்தபடியே வீட்டு வேலைகளைக் கவனிக்கிறீர்கள். ஆகவே இந்தப் பகுதி உமக்கு உரியது" என்றான்.

அடுத்ததாகக் கோழியின் கால்களை வெட்டினான். செல்வரின் மகன்களிடம் ஆளுக்கொரு காலாகத் தந்தான். "நீங்கள் உங்கள் தந்தையின் நிலத்திற்குச் சென்று உழைக்கிறீர்கள். ஆகவே இந்தக் கால்கள் உங்களுக்கு உரியது" என்றான்.

கோழியின் இரண்டு இறக்கைகளையும் வெட்டினான். செல்வரின் மகள்களிடம் தந்தான். "நீங்கள் வேறு வீட்டிற்குப் பறந்து செல்லப்

Scanned by CamScanner

போகிறீர்கள். அதனால் இறக்கைகளை உங்களுக்குத் தந்தேன்" என்றான்.

"செல்வரே! நீங்கள் சொன்னபடி பிரித்துத் தந்துவிட்டேன். எஞ்சிய பகுதியை நான் எடுத்துக் கொண்டேன்" என்றான்.

கோழியின் சிறந்த பகுதிகள் அவனிடம் இருப்பதையும் பயனற்ற பகுதிகளை அவன் பிரித்துத் தந்திருப்பதையும் பார்த்தார் செல்வர். அவன் அறிவுக் கூர்மையைப் பெரிதும் பாராட்டினார்.

"இனி நீ வறுமையில் வாடவேண்டாம். மகிழ்ச்சியாக இரு" என்று

று பணத்தைத் தன் அன்பளிப்பாக அவனிடம் தந்தார் செல்வர்.

பணத்துடன் மகிழ்ச்சியோடு வீடு திரும்பினான் அவன்.

பக்கத்து வீட்டிலிருந்த இன்னொரு உழவன் இதைக் கேள்விப் ட்டான். ஒரு வறுத்த கோழிக்கு நூறு பணமா? 'இன்றே ஐந்து வறுத்த காழிகளுடன் செல்வரைச் சந்திப்பேன். ஏராளமான பணத்துடன் ிரும்புவேன்' என்று நினைத்தான் அவன்.

வறுத்த முழுக்கோழிகள் ஐந்தை எடுத்துக்கொண்டு செல்வரைச் ந்தித்தான் அவன். "என் அன்பளிப்பாக இவற்றை ஏற்றுக் காள்ளுங்கள்" என்றான்.

மகிழ்ச்சி அடைந்த செல்வர் தன் குடும்பத்தினரை அழைத்தான். வன் மனைவியும் இரண்டு மகன்களும் இரண்டு மகள்களும் வெளியே ந்தனர்.

"உழவனே! நாங்கள் ஆறு பேர் இருக்கிறோம். நீ கொண்டு வந்திருக்கும் ந்து கோழிகளை எங்களுக்குப் பிரித்துக் கொடு" என்று சிரித்துக் காண்டே கேட்டான் செல்வர்.

ஐந்து கோழிகளை ஆறு பேருக்கு எப்படிப் பிரித்துத் தருவது என்று வனுக்குப் புரியவில்லை. திருதிருவென்று விழித்தான்.

வேலைக்காரனை அழைத்த செல்வர், "நீ ஓடிச்சென்று நேற்று ங்கு வந்த உழவனை அழைத்து வா" என்றான்.

வேலைக்காரனும் சிறிது நேரத்தில் அவனுடன் அங்கு வந்தான்.

அவனைப் பார்த்து செல்வர், "இங்கே ஐந்து கோழிகள் உள்ளன. ாங்கள் ஆறு பேர் இருக்கிறோம். எங்களுக்குப் பிரித்துக் கொடு" ன்றான்.

"மிக எளிது" என்ற அவன் ஒரு கோழியை செல்வரிடமும் அவர் னைவியிடமும் தந்தான். "கோழியையும் சேர்த்து நீங்கள் மூன்று பர்" என்றான்.

இரண்டு மகன்களிடமும் ஒரு கோழியைத் தந்தான். "இப்பொழுது ங்கள் மூன்று பேர்" என்றான்.

அதேபோல் இரண்டு மகள்களிடமும் ஒரு கோழியைத் தந்தான். இப்பொழுது நீங்கள் மூவர்" என்றான்.

"மீதம் உள்ள இரண்டு கோழிகளையும் என்னையும் சேர்த்தால்

Scanned by CamScanner

நாங்கள் மூன்று பேர்" என்றான்.

செல்வரினால் சிரிப்பை அடக்க முடியவில்லை. "எப்படிப் பங்கு பிரித்தாலும் உனக்கு நன்மையே கிடைக்கிறது. உன் அறிவுக்கூர்மைக்கு இன்னும் ஒரு நூறு பணம் பரிசாகப் பெற்றுக்கொள்" என்று தந்தான்.

நூறு பணம், இரண்டு கோழிகளுடன் வீடு திரும்பினான் அவன்.

ஏமாற்றம் அடைந்த பக்கத்து வீட்டுக்காரன் வெறுங்கையுடன் திரும்பினான். ★

Scanned by CamScanner

# ஆமை முட்டைக்கு பாதுகாப்பு

நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய ஆமைகள் முட்டையிடுவது நிலத்தில் தான். கடல் ஆமைகள் முட்டைகளை பாதுகாப்பான இடங்களில் இட்டுவிட்டு மீண்டும் கடலுக்குள் சென்றுவிடுகின்றன. பிறகு நிலத்துக்கு வந்து முட்டைகளை அடைகாத்து குஞ்சு பொரிக்கின்றன.

சில ஆமைகள் பாதுகாப்பற்ற இடங்களில் முட்டைகளை இட்டு கடலுக்குள் சென்றுவிடுகின்றன; பிறகு அந்த முட்டைகள் பொரிக்காமலேயே அழிந்துபோகின்றன. இதைத் தடுக்க ஜப்பான் நாட்டின் கடல்வாழ் உயிரினப் பொருட்காட்சி சாலையைச் சேர்ந்தவர்கள், பாதுகாப்பற்ற இடங்களில் கிடக்கும் ஆமை முட்டைகளை தேடிப்பிடித்து எடுத்துச் சென்று பாதுகாப்பான முறையில் குஞ்சு பொரிப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். குஞ்சு பொரித்தவுடன் ஆமைக் குஞ்சுகளை அவர்கள் பத்திரமாக கடலில் விட்டுவிடுகிறார்கள்.

# சிகரெட் குடிக்கும் மாணவர்கள்

எந்த நாட்டு மாணவ– மாணவிகள் அதிகமாக சிகரெட் குடிக்கிறார்கள் என்று சமீபத்தில் ஒரு கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்டது. முடிவில் ரஷியா நாட்டு மாணவ– மாணவிகள் அதிகமாக சிகரெட் குடிப்பது தெரியவந்துள்ளது.

ரஷியாவில் உள்ள மாணவர்களில் சுமார் 40 சதம் பேர் சிகரெட் குடிக்கின்றனர். மாணவிகளில் 25 சதம் பேர் தினமும் 'தம்' அடிப்பவர்களாக உள்ளனர்.

மாணவர்களுக்கு 10–வது வயதிலேயே சிகரெட் குடிக்கும் பழக்கம் வந்துவிடுகிறதாம். அதே சமயத்தில் மாணவிகள் 12 வயதில் இந்த கெட்டப் பழக்கத்தை தொடங்குகிறார்களாம்.

சிகரெட் குடிக்கும் மாணவர்களில் பாதி பேர் தங்கள் பெற்றோருக்கு தெரிந்தே குடிக்கிறார்களாம். ரஷியாவில் எவ்வளவோ... நடவடிக்கைகள் எடுத்தும் மாணவ– மாணவிகளை சீரழிக்கும் இந்த கொடிய பழக்கத்தை இன்னமும் கட்டுப்படுத்த முடியவில்லை.

★ ஒன்பதாவது ஒலிம்பிக் போட்டிகளின்போதுதான் புறாக்களைப் பறக்கவிட்டு ஒலிம்பிக் திருவிழாவைத் தொடங்கி வைக்கும் பழக்கம் ஆரம்பமானது.

Scanned by CamScanner

கரும்புலி தோன்றும்

# கோவில் கொள்ளையர்கள்

கோவிலுக்குள்
புகுந்து அட்டகாசம்
செய்யும்
கொள்ளையர்களை
விரட்டியடிக்க
வருகிறார், கரும்புலி!
படபடக்க வைக்கும்
படக்கதை!

**நவம்பர் 1 "ராணி காமிக்ஸ்" இதழ்ல் வெளிவருகிறது!**

**படிக்கத் தவறாதீர்கள்!**

"ராணி காமிக்ஸ்", சென்னை - 600 007.

Regd. with the registrar of Newspaper for India under No. 42576/84 – ISSN 0971-8567
OCTOBER 16, 1998
RANI COMICS (TAMIL FORTNIGHTLY)

# தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

## சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் இலவச இணைப்பாக 32 பக்க வண்ண புத்தகம்

**உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்**

Scanned by CamScanner